# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● மார்ச் 24, 2018 Weekly E-paper ● March 24, 2018


# ரத யாத்திரை எதிர்ப்பு... இந்துமத எதிர்ப்பா?



● சுப.வீரபாண்டியன்

இந்திய அரசமைப்புச் சட்டம், எல்லோருக்கும் தங்களின் மதக் கொள்கைகளைப் பரப்பும் உரிமையை அளித்துள்ளது.அவ்வாறிருக்க, இந்துமதத்தைப் பரப்பும் எண்ணத்தோடு வந்த ரத யாத்திரையைத் தமிழ்நாட்டில் ஏன் தடுத்து நிறுத்தினீர்கள் என்று பெரிய நியாயவான்களைப் போலச் சிலர் கேட்கின்றனர்.

மதுரையில் சில தேவாலயங்களில் கலவரம் செய்தபோது இக்கேள்விகளை அவர்கள் எழுப்பவில்லை. அது ஒரு புறமிருக்க, இந்து மத ரத யாத்திரையை ஏன் எதிர்த்தோம் என்பதற்கு மக்களிடம் நாம் விளக்கம் சொல்லியாக வேண்டும்.

நாம் எந்த மதத்திற்கும் எதிரிகள் இல்லை. அது அவரவர் நம்பிக்கை சார்ந்தது. மதக் கருத்துகளை பரப்புவது அவரவர் உரிமை. மதங்களுக்கு எதிரான கருத்துகளை வெளியிடுவதும் எல்லோருக்குமுள்ள உரிமை. ஆனால் மதக் கலவரங்களை ஏற்படுத்த எவருக்கும் உரிமையில்லை. இந்தியா முழுவதும் சங் பரிவாரங்கள் அதனைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

உ.பி.யில் தொடங்கி நான்கு மாநிலங்களைக் கடந்து தமிழ்நாட்டிற்குள் நுழைந்த ராமராஜ்ய ரத யாத்திரை வெறும் ஆன்மிக, மத நோக்கங்களை மட்டும் கொண்டதன்று. அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது, ராமராஜ்யத்தை இந்தியாவில் ஏற்படுத்துவது, இந்தியா முழுவதும் பாட நூல்களில் ராமாயணத்தைப் பாடமாக்குவது, வார விடுமுறையை ஞாயிறிலிருந்து வியாழனுக்கு மாற்றுவது எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே அந்த யாத்திரை நடத்தப்பெற்றது.

உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது, அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பான பயணத்தை மேற்கொள்வது சரியா என்பதும், மற்ற கோரிக்கைகளும் ஒரு புறமிருக்க, ராமராஜ்யம் அமைத்தல் என்னும் அரசியல் பரப்புரையை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

ராமராஜ்யம் என்றால் என்ன, அது எப்படி இருக்கும் என்பதை எல்லாம் நாம் எங்கு போய்த் தெரிந்து கொள்வது? கம்ப ராமாயணத்தில் ராமராஜ்யம் பற்றி எந்தச் செய்தியும் இல்லை. இருக்கவும் முடியாது. ராமர் முடி சூட்டிக் கொள்வதோடு அது முடிந்து போகிறது. எனவே அதற்குப் பின் அவர் எப்படி ஆட்சி நடத்தினார் என்பதற்கு அதில் நாம் விடை தேட முடியாது. மூல நூலான வான்மீகி ராமாயணத்திற்குத்தான் செல்ல வேண்டும்.

வான்மீகி ராமாயணம் 7 காண்டங்களைக் கொண்டது. 7ஆவது காண்டம் உத்தர காண்டம். அதில்தான் ராமர் ஆட்சி பற்றிய செய்திகள் உள்ளன. குறிப்பாக சம்பூகன் வதைச் சருக்கம் அதில்தான் உள்ளது.

உத்தர காண்டம் மொத்தம் 111 சருக்கங்களைக் கொண்டது. அவற்றுள் 73 முதல் 76 வரையிலான சருக்கங்கள் சம்பூகன் வதம் பற்றிப் பேசுகின்றன. வதம் என்பது கொலைதான். (இது குறித்த விரிவான விளக்கங்கள் நான் எழுதியுள்ள "இதுதான் ராம ராஜ்ஜியம்" என்னும் நூலில் உள்ளது). சம்பூகன் என்னும் ஒருவன், தன் உடலோடு சொர்க்கம் செல்ல வேண்டும் என்று வரம் கேட்டுத் தவம் செய்கிறான். இதனை அறிந்த அந்நாட்டின் மன்னர் ராமர், "சூத்திரன் எப்படித் தவம் செய்யலாம்?" என்று கேட்டுக் கோபம் கொண்டு, அவன் தலையைத் தன் வாளால் கொய்து விடுகிறார். இதுதான் சம்பூக வதம். இதுதான் ராமராஜ்யம். இந்த ராஜ்யத்தையும், அதனைப் பரிந்துரைக்கும் ரத யாத்திரையையும் நாம் எப்படி அனுமதிப்பது?

இந்தப் போராட்டம் இந்துக்களுக்கு எதிரானதன்று. சூத்திரப்பட்டம் சூட்டப்பட்டு ஒடுக்கப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான இந்துக்களுக்கு ஆதரவானது. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**



# சென்னை மாநாட்டுத் தீர்மானங்கள்

**திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சமூகநீதிப் பாதுகாப்பு மாநாடு 17.02.2018 அன்று சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள்:**

### இந்து சமய அறநிலையத்துறை கலைக்கப்படக் கூடாது

1. நீதிக்கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறையை கலைப்பதற்கான முயற்சி, தன்னலமிக்க ஒரு கூட்டத்தால் இப்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் எனும் பெயரில் வெறும் 3 விழுக்காடு மட்டுமே உள்ள ஒரு குறிப்பிட்ட சாதியினர் மொத்தக் கோயில் சொத்துகளையும் அபகரிக்கும் திட்டம் இது. எனவே தங்களை இந்துக்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் சொத்துகளைப் பார்ப்பனர்கள் பறித்துச்சென்றுவிடாமல் பாதுகாக்கும் கடமை பகுத்தறிவாளர்களுக்கும் உள்ளது. அரசின் பொறுப்பில் கோயில்கள் இருந்தால், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் நிலை கேரளாவைப் போல, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் வந்துவிடும் என்பதால் அறநிலையத் துறையை கலைக்க முயல்கின்றனர்.

எக்காரணம் கொண்டு இந்து அறநிலையத் துறை கலைக்கப்பட கூடாது. தில்லை நடராசர் கோயிலையும் தீட்சிதர்களிடமிருந்து அரசு மீட்டெடுக்க வேண்டும். மேலும், கோயில் நிலங்களில் பல்லாண்டுகளாக அடிமனைக் குத்தகை முறையில் வாழ்ந்து வரும் மக்களுக்கு அவர்கள் வாழும் நிலத்தை அவர்களுக்கே உரிமையாக்கிட, இந்து அறநிலையத் துறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### ஆணவப் படுகொலைத் தடுப்பு

2. உலக உயிர்களின் இயற்கைப் போக்கான காதலை எதிர்த்தும், தன் வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் தனி மனித உரிமைகளை மறுத்தும், சாதியின் பெயரால் நடத்தப்படும் ஆணவக் கொலைகள் தடுத்து நிறுத்தப் பட வேண்டும் என்றும் இதற்கெனத் தனிச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென இத்தீர்மானம் கோருகிறது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்



## காவிரி: மக்களை ஏய்க்கும் எடப்பாடி அரசு

**நீ**ர் அற்ற அரபுப் பாலைவனங்களில் கூட நீர் பாய்ச்சிச் சோலை வனங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

‘‘வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற்காவிரி’’ என்று புலவர்களால் போற்றப்பட்ட காவிரி, இன்று நீர் அற்று வேளாண் நிலங்கள் பாலையாகிக் கொண்டிருக்கின்றன.

உச்சநீதிமன்றம் ஆறு வார காலத்திற்குள் நதிநீர் சட்டப் பிரிவு 6ஏ-இன் படி காவிரி மேலாண்மை வாரியம் அமைத்துச் செயல்திட்டம் உருவாக்க வேண்டும் என ஆணையிட்டுள்ளது.

அதன்படி மார்ச் 29 தேதியுடன் அந்தக் கால எல்லை முடிகிறது. அதாவது இன்னும் சில நாள்களே உள்ளன, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க.

மத்திய அரசு கர்நாடகத் தேர்தலில் ஆதாயம் தேடுவதற்காக, தமிழக மக்களை வஞ்சித்து மேலாண்மை வாரியம் அமைக்க மறுத்து வருகிறது. நதிநீர்த் துறைச் செயலாளர் கூட மார்ச் 31ஆம் தேதிக்கு மேலாண்மை வாரியம் அமைக்க வாய்ப்பில்லை என்று தெளிவாகச் செல்லிவிட்டார்.

ஆனாலும் 31ஆம் தேதி வரை பொறுமை காப்போம், வாரியம் அமைந்து விடும் என்று பா.ஜ.க.வுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் எடப்பாடியும், அவரது கூட்டத்தாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் மாநில அந்தஸ்து தரவில்லை என்று ஆந்திர முதல்வரும், இடஒதுக்கீட்டில் உரிய பிரதிநிதித்துவம் தரமறுக்கிறது என்று தெலுங்கானா முதல்வரும் மத்திய மோடி அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள்.

ஆனால், இத்தீர்மானத்தை விவாதத்திற்குக் கூட எடுக்கவிடாமல் காவிரிப் பிரச்சினையை ஒரு சாக்காக வைத்து நாடாளுமன்றத்தை முடக்கிக் கொண்டிருக்கிறார்கள் அ.தி.மு.க. உறுப்பினர்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் தமிழக அரசு, தன் உரிமையைப் பெற மத்திய அரசுக்கு எச்சரிக்கை செய்யக் கிடைத்த நல்ல வாய்ப்பை வேண்டுமென்றே கைகழுவி விட்டார்கள் அ.தி.மு.க. ஆட்சியினர்.

ஆந்திர அரசு செம்மரக் கட்டைகளைக் கடத்துவதாகக் கூறி தமிழகக் கூலிகளைச் சுட்டுக் கொல்கிறது. அதனால் ஆந்திர அரசு பா.ஜ.க. அரசு மீது கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது என்று சப்பைக் கட்டுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை, நாணம் இல்லாமல்.

தமிழக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நின்றாலும், எடப்பாடி கூட்டத்தார் இரண்டகம் செய்து பா.ஜ.க.வின் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழகத்தின் வேதனை.

மொத்தத்தில் பா.ஜ.க.வின் தயவில் வாழநினைக்கும் எடப்பாடி அ.தி.மு.க. அரசு, தம் சுயநலத்திற்காக மக்களை வஞ்சித்து வயிற்றில் அடிப்பதும், வேளாண் நிலங்கள் அழிவுக்குச் செல்வதை தடுத்து நிறுத்தாமல் மோடியின் அரசுக்குத் துணை போவதும் வெட்கக் கேடான செயல்.

# சமூகநீதிப் பாதுகாப்பு மாநாடு

**2018 பிப்ரவரி 17**














## சென்னை கண்டன ஆர்ப்பாட்டம்

**16.3.2018**









# திராவிட நாடு

55 ஆண்டுகளுக்குப் பிறகு, திராவிட நாடு கோரிக்கை மீண்டும் எழுந்துள்ளது. எனினும் இது பழைய பிரிவினைக் கோரிக்கையன்று. இந்தியப் பெருங்கூட்டாட்சிக்குள் அடங்கும் திராவிடக் கூட்டாட்சி (A Federation within the Constitution of Indian Confederation) என்று கொள்ளலாம். அதற்கான தேவை இன்று எழுந்துள்ளது.

இயல்பாகவே, வடஇந்தியாவும், தென்இந்தியாவும் நிலத்தின் தன்மை, பண்பாடு, மொழிக்குடும்பம் ஆகியனவற்றால் பிரிந்தே இருக்கிறது. தென்இந்திய மக்களுக்கிடையில் ஒரு கலாச்சார ஒருங்கிணைவு இருப்பதையும் காணலாம். எனவே இந்தக் கோரிக்கை வலுப்பெற வாய்ப்பிருக்கிறது.

காவிரி நதிநீர்ச் சிக்கல், முல்லைப்பெரியாறு, கிருஷ்ணாநீர்ப் பங்கீடு ஆகியனவற்றில் தென்இந்திய மாநிலங்களுக்குள், தீர்க்க இயலாத நெடுநாள் சிக்கல் இருந்துவருவதும், தமிழகம் வஞ்சிக்கப்படுவதும் உண்மைதான். அது தீர்க்கப் பட வேண்டியது. ஒரே தமிழ்ச் சமூகத்திற்குள் கூட, சாதி அடிப்படையிலான சிக்கல்கள் இருப்பதை நாம் அறிவோம். எல்லாம் தீர்க்கப்பட வேண்டியவைதான். அதற்காகச் சேர்ந்து செயல்பட வேண்டிய நேரங்களில் நாம் விட்டுக்கொடுத்துவிட வேண்டியது இல்லை.

திராவிட நாட்டுக் கூட்டணி வலிமை பெற்றால், வடஇந்திய ஆதிக்கம் குறைவதற்கான வாய்ப்புகள் பல உண்டு.




சுப.வீரபாண்டியனின்

# இதுதான் ராமராஜ்யம்

## நூல் வெளியீட்டு விழா

**31.03.2018** சனி மாலை **6.00** மணி

கவிக்கோ அரங்கம், சி.ஐ.டி. நகர், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 600 018.

**தலைமை**

தோழர் **மு.மாறன்**

**வரவேற்புரை**

தோழர் **கார்த்திக்**

**முன்னிலை**

தோழர்கள் எழில்.இளங்கோவன், எட்வின், தமிழ்மறவன், முத்தையா குமரன், சாந்தசீலன், சூர்யா, அம்பத்தூர் ராஜு, செந்தாமரைக் கண்ணன், இளமாறன், வளசை கணேசன், ஸ்ரீவித்யா, தாம்பரம் இளங்கோ, திருக்குறளார், ரகுபதி, ஜனனி.

**கருத்துரை**

திரைப்பட இயக்குநர் **கரு.பழனியப்பன்,**


பேராசிரியர் **சுந்தரவள்ளி,**

மருத்துவர் **தாயப்பன்**



**நன்றியுரை:**

தோழர் மேடவாக்கம் **அன்பு**



அனைவரும் வருக.

அன்புடன் அழைக்கும்

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

வெளியீட்டுப் பிரிவு

2ஆம் பக்கத் தொடர்ச்சி...

### திருநங்கைகளின் உரிமை

3. சமூக ஒடுக்குமுறைக்கு ஆளாகி வரும் திருநங்கையர்களுக்குக், கல்வி வேலை வாய்ப்புகளில் அரசு மற்றும் தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு வழங்குவதோடு அவர்களுக்கு உரிமை களை மீட்டெடுக்க அவர்களுக்குத் தேசிய ஆணையம் ஒன்று அமைத்திட இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### நீட் தேர்விலிருந்து விதிவிளக்கு

4. ஒரு நூற்றாண்டு காலப் போராட்டத்தின் மூலம் திராவிட இயக்கம் கல்வித் துறையில் நிகழ்த்தியிருக்கும் சாதனைகள் குறிக்கத்தக்கது. இப்பொழுது ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமை பறிக்கும் வகையில் மத்திய அரசு கொண்டுவந்திருக்கும் நீட் எனும் தகுதி மற்றும் நுழைவுத் தேர்விலிருந்து தமிழகத்திற்கு நிரந்தர விலக்கு அளிக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களில் கல்வித் துறையில் மத்திய அரசின் தலையீட்டால் இதுபோன்ற சமூக அநீதிக்கு இடம் கொடுக்காமல், கல்வி மத்தியப் பட்டியலிருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு

5. சாதி மதக் கோட்பாடுகளில் ஊறிப்போன சமூகத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. சமூக சமத்துவ நிலைக்கு அவர்களின் முன்னேற்றத்தில் கல்வி வேலை வாய்ப்பு முன்னுரிமை பெறுவதால் அரசு மற்றும் தனியார் துறைகளிலும், அரசியலிலும் 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நடைமுறை படுத்திட வேண்டும்.

### அனைத்துச் சாதிக்கும் பொது மயானம்

6. பிறப்பின் அடிப்படையில் திணிக்கப்பட்ட சாதி இழிவை, இறப்பிற்குப் பின்னரும் சுமந்து செல்லும் இழிநிலையை ஒழிக்கும் வகையில், தமிழ்நாட்டில் சிற்றூர்கள் தோறும் அரசு பொது மயானங்கள் அமைக்கப்பட்டு, அதை அனைத்துச் சாதி மக்களும் பயன்படுத்த வழிவகை செய்வதோடு சாதிக்கொரு மயானம் என்பதைச் சட்டப்படி தடைசெய்ய வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.